சமூகநீதி எனும் பேரொளியை தூக்கி சுமந்த விடிவெள்ளி

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்தநாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

சென்னை, ஜூன் 25- முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி சிங்கின் 95வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு:

இந்திய நிலப்பரப்பில் மண்டிக்கிடந்த ஆதிக்க இருள் அகற்றிட, சமூக நீதி எனும் பேரொளியைத் தூக்கிச் சுமந்த விடிவெள்ளி 'சமூகநீதிக் காவலர்' வி.பி.சிங் புகழை நாளும் போற்றுவோம்! ஆதிக்கத்துக்கு எதிரான போராட்ட வரலாற்றைத் திரிபுகளால் மாற்றுவது மீண்டும் அடிமைத்தனத்துக்கே வழியமைக்கும் முயற்சி என்பதை இளம் தலைமுறைக்கு எடுத்துச் சொல்வோம்!.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

தங்கம் விலை 3வது நாளாக சரிவு

பவுன் ரூ.72,560க்கு விற்பனை

சென்னை, ஜூன் 25- தங்கம் விலை இன்று கிராமுக்கு ரூ.85 குறைந்து ஒரு கிராம் ரூ.9070க்கு விற்கப்படுகிறது. பவுனுக்கு ரூ.680 குறைந்து ஒரு பவுன் தங்கம் ரூ.72,560க்கு விற்பனையாகிறது. தங்கம் விலை 3 நாளில் சவரனுக்கு ரூ.1320 குறைந்துள்ளது.

சென்னையில் ஆபரணத் தங்கம் விலை கடந்த 14ம் தேதி ஒரு பவுன் ரூ.74,560க்கு விற்பனையாகி வரலாற்றில் புதிய உச்சம் தொட்டது. அதன் பிறகு தங்கம் விலை ஏறுவதும், இறங்குவதுமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த 21ம் தேதி தங்கம் விலை கிராமுக்கு ரூ.25 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,235க்கும், பவுனுக்கு ரூ.200 உயர்ந்து ஒரு பவுன் ரூ.73,880க்கும் விற்பனையானது. 22ம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் தங்கம் மார்க்கெட்டுக்கு விடுமுறையாகும். இதனால், தங்கம் விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

திங்கட்கிழமை தங்கம் மார்க்கெட் தொடங்கியது. அதில் தங்கம் விலை பெயரளவுக்கு குறைந்திருந்தது. அதாவது, கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் ரூ.9,230க்கும், பவுனுக்கு ரூ.40 குறைந்து ஒரு பவுன் ரூ.73,840க்கும் விற்பனையானது. அதே நேரத்தில் வெள்ளி விலையில் எந்த விதமாற்றமும் ஏற்படவில்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.120க்கும், பார் வெள்ளி 1லட்சத்து 22 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

இந்நிலையில் நேற்று சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.600 குறைந்து ரூ.73,240க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.75 குறைந்து ரூ.9,155க்கு விற்பனையானது. சில்லறை வர்த்தகத்தில் வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.120க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த சூழலில், இன்றும் தங்கம் விலை குறைந்தது. கிராமுக்கு ரூ.85 குறைந்து ஒரு கிராம் ரூ.9070க்கு விற்கப்படுகிறது. பவுனுக்கு ரூ.680 குறைந்து ஒரு பவுன் தங்கம் ரூ. 72, 560க்கு விற்பனையாகிறது. தங்கம் விலை 3 நாளில் சவரனுக்கு ரூ.1320 குறைந்துள்ளது.

ஈரானின் அணுசக்தி மையங்களை அழிக்கவில்லை

அமெரிக்க உளவுத் துறை வெள்ளை மாளிகை மோதல்

மார்தட்டிக் கொள்ளும் டிரம்பின் அறிவிப்பால் சலசலப்பு

நியூயார்க், ஜூன் 25- ஈரானின் அணுசக்தி மையங்களை அழிக்கவில்லை என்று அமெரிக்க உளவுத் துறை கூறியுள்ள நிலையில், அதற்கு வெள்ளை மாளிகைமறுப்பு தெரிவித்துள்ளது. இதற்கிடையே இவ்விசயத்தில் மார்தட்டிக் கொள்ளும் டிரம்பின் அறிவிப்பால் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே 12 நாட்கள் நடந்த கடும் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க அதிபர் டிரம்ப் போர் நிறுத்தத்தை அறிவித்தார். இந்தப் போரில், ஈரானின் சுரங்க அணுசக்தி மையங்களை அமெரிக்கா சக்திவாய்ந்த 'பங்கர் பஸ்டர்' குண்டுகள் மூலம் தாக்கியது. போர் நிறுத்தத்திற்குப் பிறகு, இரு நாடுகளுமே தங்களுக்கு வெற்றி கிடைத்ததாக அறிவித்தன. ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தலை நீக்கிவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறினார். ஈரானோ இது தங்களுக்கு கிடைத்த பெரும் வெற்றி என்றது. இதே வேளையில், அமெரிக்காவின் தாக்குதல் ஈரானின் அணுசக்தித் திட்டத்தை முற்றிலுமாக அழித்துவிட்டதாக அதிபர் டிரம்ப் பெருமையுடன் அறிவித்திருந்தார். ஆனால், அதிபர் டிரம்பின் கூற்றை அவரது சொந்த நாட்டின் உளவுத்துறை அமைப்பே மறுத்துள்ளது. அமெரிக்க பாதுகாப்பு உளவுத்துறை வெளியிட்டுள்ள ஆரம்பகட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி, 'வான்வழித் தாக்குதல்களால் ஈரானின் அணுசக்தித் திட்டம் முழுமையாக அழியவில்லை. மாறாக, சில மாதங்கள் மட்டுமே பின்னடைவைச் சந்தித்துள்ளது. சுரங்கங்களுக்குள் இருந்த அணுசக்தி மையங்கள் இடிந்து விழவில்லை. அவற்றின் நுழைவாயில்கள் மட்டுமே மூடப்பட்டுள்ளன. செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பு முழுமையாக அழிக்கப்படவில்லை' என்று அந்த அறிக்கை கூறுகிறது. இந்த உளவுத்துறை அறிக்கை முற்றிலும் தவறு என அதிபரின் வெள்ளை மாளிகை மறுத்துள்ளது. அதிபரின் அறிவிப்புக்கும், உளவுத்துறையின் அறிக்கைக்கும் இடையே உள்ள இந்த முரண்பாடு, தற்போது சர்வதேச அளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

திடீர் பல்டி அடித்த அதிபர் டிரம்ப்!

ஈரான் - இஸ்ரேல் இடையே நடந்த வான்வழித் தாக்குதல்களுக்குப் பிறகு, ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற தொனியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பேசியது, நட்பு நாடுகளிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. கடந்த வார இறுதியில் தனது சமூக வலைதளப் பக்கத்தில், 'தற்போதைய ஈரான் ஆட்சியால் நாட்டை மீண்டும் சிறப்பாக்க முடியாவிட்டால், அங்கு ஏன் ஆட்சி மாற்றம் நடக்கக்கூடாது?' என்று அவர் பதிவிட்டிருந்தார். ஆனால், அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கை ஈரானின் அணுசக்தித் திட்டத்தை முடக்குவதற்கு மட்டுமே, ஆட்சி மாற்றத்திற்காக அல்ல என்று அவரது பாதுகாப்புச் செயலர் மற்றும் துணை அதிபர் உள்ளிட்டோர் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தனர். இதனால், டிரம்பின் பேச்சு சர்ச்சையான நிலையில், வெள்ளை மாளிகை தலையிட்டு, ஆட்சி மாற்றம் என்பது ஈரான் மக்களின் முடிவு, அது அமெரிக்காவின் நோக்கமல்ல என்று விளக்கமளித்தது. இந்நிலையில், சில நாட்களிலேயே தனது நிலைப்பாட்டில் இருந்து அதிபர் டிரம்ப் முற்றிலும் பின்வாங்கியுள்ளார். நேட்டோ மாநாட்டிற்குச் செல்லும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவரிடம், ஈரானில் தலைமை மாற்றப்பட வேண்டுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த டிரம்ப், 'இல்லை. நான் அதை விரும்பவில்லை. எல்லாம் விரைவில் அமைதியாக வேண்டும் என்று விரும்புகிறேன்' என்று கூறினார். ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே தான் ஏற்பாடு செய்த போர் நிறுத்தம் நீடிக்கப் போராடி வரும் நிலையில், டிரம்ப் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளது அவரது வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மற்றுமொரு தடுமாற்றமாகவே பார்க்கப்படுகிறது.

திருச்செந்தூர் கோயிலில்

தமிழிலும் குடமுழுக்கு நடக்கும்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி

பெரம்பூர், ஜூன் 25- திருச்செந்தூர் முருகன் கோயிலில் தமிழில் குடமுழுக்கு நடத்தப்படும் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

சென்னை திருவிக.நகர் தொகுதி வியாசர்பாடி, கன்னிகாபுரம் விளையாட்டு மைதானத்தில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் நடைபெற்றுவரும் பணிகள் குறித்தும் பெரம்பூர் சந்திரயோகி சமாதி சாலையில் கட்டப்பட்டுவரும் சமுதாய நலக்கூடம், புரசைவாக்கம் கான்ரான் ஸ்மித் சாலையில் கட்டப்பட்டுவரும் சலவைக் கூடத்தையும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார். அப்போது மேயர் பிரியா, தாயகம் கவி எம்எல்ஏ உள்பட பலர் இருந்தனர்.

ஆய்வுக்கு பிறகு நிருபர்களிடம் அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது;

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டோம். புரசைவாக்கம் கான்ரான் ஸ்மித் சாலையில் கட்டப்பட்டுவரும் சலவை கூடமானது 6 கோடி ரூபாய்க்கு பணிகள் நடைபெறுகிறது. செப்டம்பர் மாதத்திற்குள் பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அதிநவீன வசதிகளுடன் இந்த சலவை கூடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழா குறித்த கேள்விக்கு, ''நீதிமன்றத்தில் நாங்கள் சொல்லி இருக்கிறோம், தமிழிலும் குடமுழுக்கு நடைபெறும்' என்றார்.

117 முருகன் கோயிலில் குடமுழுக்கு நடைபெற்ற போதும் முதலமைச்சர் ஒரு கோயில் குடமுழுக்கில் கூட பங்கேற்க வில்லை என தமிழிசை கூறியுள்ளாரே?

ஒருவரது வழிபாட்டு உரிமையில் தலையிடுவது நாகரிகம் அல்ல. மற்றவரின் வழிபாட்டு நெறிமுறைகளில் தலையிட கூடாது. நாத்திகர்கள், ஆத்திகர்கள் ஒருசேர கொண்டுவந்த அரசு இந்த அரசு. இந்த அரசு வந்த பிறகு 3,117 கோயில்களில் குடமுழுக்கு, 10,880 கோயில்களில் உயர்மட்ட தொல்லியல் துறையின் அனுமதி பெற்றுள்ளோம். 826 கோயிலில் 1306 கோடி செலவில் பணிகள் நடைபெற்றுள்ளது. திமுக ஆட்சிக்கு பிறகுதான் மருதமலையில் உலகிலேயே உயரமான 184 அடி உயர சிலை நிறுவப்பட உள்ளது.

இறை வனையோ இறை நம்பிக்கை உள்ளவர்களையே விமர்சனம் செய்வதோ எதிர் கருத்தை கூறுவதோ வாடிக்கையாக கொள்ளாதவர்தான் எங்கள் முதல்வர். அதுவே இறைவனை வணங்குவதற்கு சமம்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து ரயிலில் புறப்பட்டு சென்றார்.

அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேலூருக்கு ரயில் மூலம் முதல்வர் பயணம்

சென்னை சென்ட்ரலில் இன்று காலை திமுகவினர் உற்சாகமாக திரண்டு வழியனுப்பினர்

காட்பாடியில் துரைமுருகன் தலைமையில் சிறப்பான வரவேற்பு

சென்னை, ஜூன் 25- அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க இரண்டு நாள் பயணமாக, வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக இன்று காலை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட அவருக்கு திமுகவினர் உற்சாக வரவேற்பு அளித்து வழி அனுப்பி வைத்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். அதேபோன்று பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவடைந்த திட்ட பணிகளை திறந்து வைத்தும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, இரண்டு நாள் பயணமாக வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு செல்கிறார்.

இந்த மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வகையில் இன்று காலை சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து ரயில் மூலம் வேலூர் புறப்பட்டு சென்றார். இதற்காக இன்று சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து காலை 10.25 மணிக்கு புறப்படும் சாய்நகர் சீரடி சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புறப்பட்டார். ரயிலில் இணைக்கப்பட்ட சிறப்பு பெட்டியில் அவர் பயணம் செய்தார்.

முதல்வருடன், திமுக பொதுச் செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன், ஜெகத்ரட்சகன் எம்பி ஆகியோரும் ரயிலில் பயணம் செய்தனர். முதல்வரை வழியனுப்பி வைக்க ரிப்பன் மாளிகையில் இருந்தே திமுகவினர் திரண்டு நின்றிருந்தனர். சென்ட்ரல் வந்த முதல்வருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். ரயிலில் ஏறிய அவருக்கு அமைச்சர் சேகர்பாபு, எம்எல்ஏக்கள் மயிலை த.வேலு, தாயகம் கவி, மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார் மற்றும் திமுக நிர்வாகிகள் சால்வை அணிவித்து முதல்வரை வழி அனுப்பி வைத்தனர். சென்ட்ரலில் போலீஸ் கமிஷனர் அருண், துணை கமிஷனர் சுந்தரவடிவேல் ஆகியோரது தலைமையில் போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

காலை 10.25 மணிக்கு புறப்பட்ட இந்த ரயில் மதியம் 12.45 மணிக்கு வேலூர் மாவட்டம் காட்பாடி ரயில் நிலையத்தை சென்றடைந்தது. இதை தொடர்ந்து காட்பாடி ரயில் நிலையத்தில், காட்பாடி சட்டமன்ற உறுப்பினரும், அமைச்சருமான துரைமுருகன் தலைமையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதையடுத்து, சாலை மார்க்கமாக சென்ற அவருக்கு வேலூர் கிரீன் சர்க்கிள் புதிய பேருந்து நிலையம் அருகில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் மதியம் 1 மணி அளவில், வேலூர் மாவட்டத்தில், ரூ.198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு, தரம் உயர்த்தப்பட்டுள்ள பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையை திறந்து வைத்தார். இதை தொடர்ந்து, வேலூர் விருந்தினர் மாளிகைக்கு சென்ற அவர் மதிய உணவை முடித்துவிட்டு, முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்தித்தார். பின்னர் சிறிது நேரம் ஓய்வெடுத்தார்.

இதையடுத்து, அங்கிருந்து மாலை 5 மணியளவில் காரில் புறப்படும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கெங்கநல்லூர் சந்தை மேட்டிற்கு செல்கிறார். அங்கு புதிதாக கட்டப்பட்டுள்ள கலைஞர் அறிவாலயம், நூலகம் ஆகியவற்றை திறந்து வைக்கிறார். பல்வேறு நிகழ்ச்சிகளின் திறப்பு விழா, கள ஆய்வை முடித்துவிட்டு ஜூன் 26ம் தேதி திருப்பத்தூரில் இருந்து ரயில் மூலம் முதல்வர் சென்னை திரும்புகிறார்.

வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதால், பாதுகாப்பு கருதி 2 நாட்களுக்கு டிரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்படுள்ளது. தடையைமீறி டிரோன் பறக்கவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

திருப்பூரில் இன்று அதிகாலை பயங்கரம்

இந்து முன்னணி பிரமுகர் சரமாரி வெட்டி கொலை

3 பேர் கும்பல் வெறிச்செயல்; போலீசார் தீவிர விசாரணை

திருப்பூரில் இந்து முன்னணி பிரமுகர் வெட்டி கொலை செய்த இடத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். உள்படம்; கொலையான பாலமுருகன்.

திருப்பூர், ஜூன் 25- திருப்பூரில் இன்று அதிகாலை 3 பேர் கும்பலால் இந்து முன்னணி பிரமுகர் அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

திருப்பூர், குமரானந்தபுரம் காமராஜர் வீதியை சேர்ந்தவர் பாலமுருகன் (30). இவருக்கு திருமணமாகி 6 மாதமே ஆகிறது. பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். இந்து முன்னணி திருப்பூர் ஒன்றிய செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வந்தார். பாலமுருகன், மனைவி, பெற்றோருடன் வீட்டில் வசித்து வந்தார்.

இந்நிலையில் பாலமுருகனுக்கு நள்ளிரவு 12 மணிக்கு ஒரு செல்போன் அழைப்பு வந்தது. அதை தொடர்பு கொண்ட சிறிது நேரத்தில், வெளியே சென்றார் பாலமுருகன். அதற்கு பிறகு வீடு திரும்பவில்லை. நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத தால் குடும்பத்தினர் அதிர்ச்சியில் இருந்தனர்.

இந்நிலையில் இன்று அதிகாலை 5 மணியளவில், 'பாலமுருகனை காணவில்லை' என அவரது உறவினர்கள் வீட்டை விட்டு வெளியில் வந்தனர். அப்போது வீட்டின் அருகில் பாலமுருகன் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். உடலை பார்த்து உறவினர்கள் கதறி அழுதனர். மர்மநபர்களால் பாலமுருகன் வெட்டி கொலை செய்யப்பட்டு கிடந்து தெரியவந்தது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு மாநகர துணை கமிஷனர் பிரவீன் கவுதம், உதவி கமிஷனர் வசந்த குமார் மற்றும் போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். தொடர்ந்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். போலீசார் நடத்திய விசாரணையில் இன்று அதிகாலை 4 மணிக்கு 3 பேர் கும்பல், பாலமுருகனை அவர் வசிக்கும் அதே வீதியில் அவரை சரமாரியாக அரிவாளால் வெட்டி கொலை செய்து விட்டு தப்பி சென்றது தெரியவந்தது. மேலும் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை கைப்பற்றி வடக்கு போலீசார் விசாரித்து வருகின்றனர். இதற்கிடையே கொலையாளிகளை பிடிக்க அமைக்கப்பட்ட 3 தனிப்படை போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ரயில் கட்டணங்களை உயர்த்த வேண்டாம்

பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, ஜூன் 25- ரயில் கட்டணங்களை உயர்த்த வேண்டாம் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கைவைத்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் கூறி இருப்பதாவது:

இந்திய ரயில்வே என்பது ஏழை - நடுத்தர மக்களின் பயணங்களுக்கானது மட்டுமல்ல; அது, அவர்களது அன்றாட வாழ்வில் ஓர் அங்கம்!

இன்று காட்பாடி செல்ல ரயில் நிலையம் வந்தபோது, என்னை அன்போடு வரவேற்ற மக்களிடம் பேசினேன். வழக்கமான உற்சாகமும் மகிழ்ச்சியும் குறைந்திருந்தது. ஜூலை முதல் உயர்த்தப்படவுள்ள ரயில் கட்டணங்களும் - குறைந்துவரும் சாதாரண வகுப்பு பெட்டிகளும் அவர்களது மகிழ்ச்சியை களவாடியுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோருக்கு மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்வது...

ஏசி பெட்டிகள் உயர்த்த வேண்டும் என சாதாரண வகுப்பு பெட்டிகளை குறைக்க வேண்டாம். ரயில் கட்டணங்களையும் உயர்த்த வேண்டாம். ஏற்கெனவே விலைவாசி உயர்வு முதல் சிலிண்டர் விலை உயர்வு வரை நம் நடுத்தர குடும்பங்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கவலையை மேலும் அதிகரித்திட வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

திரையுலகில் போதைப் பொருள் பயன்பாடு இருக்கு

நடிகர் விஜய் ஆண்டனி ஒப்புதல்

சென்னை, ஜூன் 25- "திரையுலகில் போதைப் பொருள் பயன்பாடு நீண்ட நாட்களாகவே உள்ளது. சிகரெட் பிடிப்பதும் போதைப் பழக்கம் தான். அதன் அடுத்த கட்டம் தான் போதைபொருள் பயன்பாடு" என இசையமைப்பாளரும், நடிகருமான விஜய் ஆண்டனி தெரிவித்துள்ளார்.

விஜய் ஆண்டனி நடிப்பில் அடுத்து வெளியாகும் 'மார்கன்' படத்தின் புரோமோஷன் விழா மதுரை சின்ன செட்டிகுளத்தில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது. இதில், படக்குழுவினருடன் விஜய் ஆண்டனி கலந்துகொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இயக்குனர் உடனான நட்பின் அடிப்படையில் 'மார்கன்' படத்தை தானே தயாரித்துள்ளதாகக் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், "திரையுலகில் போதைப்பொருள் பயன்பாடு நீண்ட நாட்களாகவே உள்ளது. சிகரெட், மது, அதன் அடுத்த கட்டம் தான் போதைபொருள் பழக்கம். நடிகர் ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணை நடைபெற்று வருகிறது. அவர் போதை பயன்படுத்தியது தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் நடிக்கும் 'சக்தி திருமகன்' திரைப்படத்திற்கு பின்பு அனைத்து நடிகர்களுக்கும் இசையமைக்க திட்டமிட்டுள்ளேன். மேலும் மற்ற நடிகர்களை வைத்து படம் தயாரிக்க இருக்கிறேன்" என்றார்.

Godrej Finance Limited
Godrej | FINANCE
A Godrej Capital Company

பொது அறிவிப்பு

'கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்' நிறுவனத்தால், மாஸ்டர் டைரக்ஷன் – ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா (வங்கி சாரா நிதி நிறுவனம் – அளவு அடிப்படையிலான ஒழுங்குமுறை) வழிமுறைகள், 2023 இன் பத்தி 43ன் படி வெளியிடப்பட்டது.

கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் ("நிறுவனம்" அல்லது "GFL") என்பது நிறுவனங்கள் சட்டம், 1956 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும் (பெருநிறுவன அடையாள எண்: U67120MH1992PLC065457). இது இந்திய ரிசர்வ் வங்கியுடன் (COR. எண்: 13.00368) வைப்புத்தொகை பெறாத வங்கி சாரா நிதி நிறுவனமாக ("NBFC") பதிவு செய்யப்பட்டுள்ளது. GFL அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கோத்ரெஜ் ஒன், பிரோஜ்ஷாநகர், ஈஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, விக்ரோலி (கிழக்கு), மும்பை - 400079, மகாராஷ்டிரா என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இது செயல்பாட்டு காரணங்களுக்காக, ஷண்முகா காம்ப்ளக்ஸ், எண் 49 N, எண் 115 காமராஜர் தெரு, காஞ்சிபுரம் – 631501, தமிழ்நாடு என்ற முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்தின் கிளை அலுவலகம், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மூடப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. கிளை செயல்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் கிங் பிளாசா, எண் 18/1, வல்சா தெரு, மாநகராட்சி அலுவலகம் அருகில், வேலூர் – 632001, தமிழ்நாடு என்ற முகவரியில் அமைந்துள்ள கிளை அலுவலகத்திலிருந்து மேற்கொள்ளப்படும்.

அனைத்து வாடிக்கையாளர் கேள்விகளுக்கும் customercare@godrejcapital.com என்றமின்னஞ்சல் முகவரியில் பதிலளிக்கப்படும்.

இது தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் அல்லது விசாரணைகள் இருந்தால், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் திரு. யோகேஷ் ஜெயின், தலைமை இணக்க அதிகாரி அவர்களுக்கு முகவரியிட்டு, நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது **gfl.compliance@godrejfinance.com** என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

கையொப்பம்/-
கோத்ரெஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக

இடம்: மும்பை
தேதி: 25/06/2025